திருச்சிற்றம்பலம்.

கடம்பவனபுராணம்.

தொண்டைமண்டலத்து

இலம்பூர்

வீமநாதபண்டிதர்

இயற்றியது.

இஃது

ஸ்ரீமத்பரம

வாமதேவ

முருகபட்டாரகரால்

பலபிரதி ரூபங்களைக்கொண்டு பரிசோதித்து,

சென்னபட்டணம்

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரம வரு ஆடி மீ

இதன் விலை ரூபா - கவ.

(Registered Copy Right.)

F

[illegible]13.28 ト-レ

[illegible]

உ

கணபதி துணை.

வீமநாதபண்டிதர்

சரித்திரச்சுருக்கம்.

தொண்டைமண்டலத்திலே, புழற்கோட்டத்திலே, இலம்பூரிலே கங்காகுலத்திலே, தென்னவராயமரபிலே நெய்தனிலத்துப் பொருட்செல்வத்தோடு மிகுந்த கீர்த்தியைப் பெற்ற தம்முடைய தந்தை தாய் இருவர்களுஞ் செய்த அரிய தவத்தினாலே, வீமநாதபண்டிதர் என்பவர் அவதரித்து, உரிய பருவத்திலே, கலவி கற்கப் புகுந்து, சின்னாளிலே வடமொழி தென்மொழி என்னும் இவ்விரண்டு பாஷையினும் மிகுந்த வல்லவராய், சிவதீக்ஷைபெற்று, உபய பாஷாப் பிரசித்தங்களாகிய பொதுநூல்களையும், சைவ சமய நூல்களையும் ஐயந் திரிபு அறக் கற்றுணர்ந்து, அவற்றின் மெய்ப் பொருளாவார் சிவபெருமானே என்று, தெளிந்திறுணிந்து கொண்டார்.

அவருக்குத் தம் மரபின் பெயராகிய தென்னவராயர் என்னுங் காரணத்திருப்பெயருக்குரிய மதுரைச் சொக்கநாத சுவாமியைத் தரிசிக்க வேண்டும் என்னும் பேரன்பு தலைப்பட்டது; பட்டவே, மதுராபுரிக்குச் சென்று, பொற்றாமரை முதலிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து, சித்திவிநாயகரை வணங்கி, மீனாட்சியையும் சொக்கநாத சுவாமியையும் தரிசித்து, துதித்து, வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலிலே அமிழ்ந்தி நின்றார்.

அவருடைய ஸ்தோத்திர சடிலத்தையும், பத்தியையும், அத்தியந்த விநயத்தையும் அறிந்து ஆச்சரியமுற்ற அவ்வாலயத்து அர்ச்சகர்களும் அந்தத் தலவாசிகளும் அவரை நோக்கி "நீர் இந்தத் தலபுராணமாகிய வடமொழிக் கடம்பவன மான்மியத்தைக் கேட்கும் உபய பாஷா சாஸ்திரப் பிரவாத்தக வித்துவான்களின் செவிகட்கு அமிர்தமாக இருக்கும் வண்ணம் தமிழினாலே விளக்கமாகப் பாடிமுடியும்" என்று, ஆஞ்ஞாபித்தார்கள்.

வீமநாதபண்டிதா, அவ வாஞ்ஞையைக கைக்கொண்டு, அந்தத் தலதகிலேயே வசிததிருநது, சொககநாத சுவாமியின திருவருளை முனனிட்டு, அப புராணந் தமிழினறு் பாடத தொடஙகி, அப புராணததிறகுக கடமபவன புராணம எனனும வடமொழிப பெயரையே பெயராகத தநது, அதனை அறுபதினொரத்தியாயமாகப பாகுபாடு செயது, அவ வததியாயங களுளளே இலீலாசஙகிரகவததியாயததில மதுரைத தலவிசேடமும, புறத தொட்டி முனமாலிய தீர்த்தமகற்று நாகசேடனுபவ வியாதிகளும, சிவபெருமானுககு அறபுதமாகிய விபூதி உருத்திராக்கம பஞ்சாககரம சிவநாமம சிவவிரதம சிவபுண்ணியம சிவபுராணம சிவத்துரோகம் சிவபூசை குருமகத்துவம் எனனும இபபததும, இவற்றுள் விபூதி உருததிராககஙகளில விசேடவிதியும, சிவபூசையில சிவலிஙகஇலககணமும, பிரதோடம பிரதோடவிரதம் பிரதோடபூசாகாலநிண்ணயம பிரதோடபூசை பிரதோடவிரதோததியாபனம எனபனவும, குருமகத்துவததில சீடரிலககணம சிவனடியாரிலககணம துறவியரிலக்கணம மகேசுரவடிவம எனபனவும, ஏனையததியாயஙகளுள இடையே இடையே விதிவிலககுக்களும், அவற்றின் பலஙகளுமாகிய இவைகளையமைத்து, நோககுவாரககு நோக்கும இடஙகளிலெல்லாம சொறசுவை பொருட்சுவை முதலியன கிடநது களிபபுச செயயுமவணணம் பாயிரத்தோடு விருத்தயாபபினால் விளக்கமாகப பாடி முடிவுசெயதார்.

பினபு அததிருபபுராணததை ஓர் அரசசகரைக்கொண்டு சொக்கநாத சுவாமியின சந்நிதியிலுள்ள அறுகாற் பீடததிலே எழுந்தருளபபண்ணி, விதிபபடி அருச்சனை பண்ணுவித்து, திருமுனனே விழுந்து நமஸகரித்து, துதித்து, இருந்துகொண்டு, அங்குவந்திருக்கும் உபய பாஷாப புரோகத சைவ சித்தாந்த சாஸ்திரிகள் முதலாயினா யாவருங் கேட்கும்படி தாமே வாசித்து, பொருள் சொல்லி அரஙகேற்றினர்.

சூசிபத்திரம்.

		பக்கம்.
	பாயிரம்.	௧
௧.	வசிட்டாதியர்கத்தியனையடைந்தவத்தியாயம்	௬
௨.	வேதாகமங்கணீபவனமின்னவத்தியாயம்	௧௦
௩.	வேதாகமங்களுக்குவரங்கொடுத்தவத்தியாயம்	௧௭
௪.	தீர்த்தமகிமையுரைத்தவத்தியாயம்	௨௪
௫.	கடம்புரிந்தவத்தியாயம்	௩௧
௬.	மகாகைலைமான்மியமுரைத்தவத்தியாயம்	௩௩
௭.	தேவியறமவளர்த்தவத்தியாயம்	௫௩
௮.	விட்டுணுவரம்பெற்றவத்தியாயம்	௫௮
௯.	பிரமன்பூசித்தவத்தியாயம்	௬௨
௧௦.	இலீலாசங்கிரகவத்தியாயம்	௭௨
	மதுரைத்தலவிசேடம்	௮௭
	புறத்தொட்டிநின்மாலியதீர்த்தமகற்றுநரகசேடாறு பவவியாதிகள்	௯௧
	விபூதி	௧௦௦
	உருத்திராக்கம்	௧௦௮
	பஞ்சாக்கரம்	௧௧௨
	சிவநாமம்	௧௧௪
	சிவவிரதம்	௧௧௯
	சிவபுண்ணியம்	௧௨௦
	சிவபுராணம்	௧௨௩
	சிவத்துரோகம்	௧௨௪
	சிவபூசை	௧௨௮
	சிவலிங்கஇலக்கணம்	௧௨௯
	பிரதோடம்	௧௪௦
	பிரதோடவிரதம்	௧௪௩
	பிரதோடபூசாகாலநிண்ணயம்	,,
	பிரதோடபூசை	௧௪௪
	பிரதோடவிரதோத்தியாபனம்	௧௪௯
	குருமகத்துவம்	௧௫௪
	சீடரிலக்கணம்	,,
	சிவனடியாரிலக்கணம்	௧௫௫
	துறவியரிலக்கணம்	௧௫௬
	மகேசுரவடிவம்	௧௫௮
	துன்மதன்முதலானவேடர்முத்திபெற்றவத்தியாயம்	௧௫௯

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு.
சென்னை-20.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கடம்பவனபுராணம்.

காப்பு.

நிலம்போற்று மகத்தியனமுன் னிகழ்த்தியவிக் கதைக்கியற்றேர்
நலம்போற்றுந் தமிழ்வாக்கு நமக்கருள்செய் திடத்தேவை
வலம்போற்றிப் பலங்கவருஞ் * சித்திவிநா யகனைமழைக்
குலம்போற்று மதிற்கூடற் கோமகளை வணங்குவாம்.

பாயிரம்.

கடம்பவனசுந்தரர்.

திருவோங்கு பேரொளியாய்ப் பராபரமாய்ச் சிவமாய்ச்சூக் கு
மமு மாகி, யருவோங்கு மனுபவகித நியமல மானசதா சிவமு மாகி,
யுருவோங்கு தொழிற்படுமென் னுயிர்க்குயிரா மமுதலிங்க வுருவாந்
தொன்மை,மருவோங்கு மலர்க்கடம்ப வனத்தமர்சுந் தரன்றுணைத்
தாள் வழுத்தல் செய்வாம். (க)

கானமா றியாடியவர்.

சிவமாகிச் சத்தியாய் நாதவிந்து வாய்ச்சதா சிவமு மாகி
நவமாரு மகேசனுருத் திரனெடுமா னான்முகனமற் றியாவு மாகித்
தவமாரு மிரசிதச்சிற் சபையில்வலத் தாண்மாறித் தையல் காண
வுவமான மின்றிருத்தம் புரியும் பேரொளியை யுளத்தில் வைப்பாம்.

---

* "தேவை வலம் போற்றிப் பலங் கவரும்" என்றது—'ஞான ஒளிவடிவினராகிய சிவபெருமானை (இடங் கொண்ட பூமியாக) வலம் வந்து கனியைக் கவர்ந்த' என்று பொருள் கொள்ளப்படும்; இப்பொருள் கோள் கல்லாடத்திலே விநாயகர் வணக்கத்திலே "கருமிடற்றுக் கடவுளைச் செங்கனி வேண்டி, யிடங்கொண் ஞாலத்து வலங்கொளும் பதத்த" என்னும் மூலத்தாலும், 'சிவந்த கனியினை விரும்பிக் கரிய மிடற்றினையுடைய கடவுளை யிடங்கொண்ட பூமியாக வலங்கொள்ளும் பதத்தினையுடையா யென்க' என்னும் அதனுரையாலும் உணர்ந்து கொள்க.

அங்கயற்கண்ணம்மை.

நாதவிந்து வாயோக போகசத்தி யாகிக்கா ரணநான் காகி
யோதுசதா வீயூகியாய்ப் பின்னமாய்ப் பரையாயுன் மணியு மாகி
யேதமறு வீரசத்தி யாய்ப்பலவாய் மேலாகு மெம்பி ராட்டி
யாதிமது ரேசர்பாகி லங்கயற்க ணம்மைபத மகத்துள் வைப்பாம்.

விநாயகர்.

கதத்தானை நீண்டகுர கதத்தானை யிராவணனைக கடிந்தோன் காணப், பதத்தானை முதலினர்முற் பதத்தானை வெள்ளையிபப் பாகன போற்று,மிதத்தானைப் பொறியிலர்கட் கிதத்தானைக் கடம்பவனத் திருக்குந் தேவை,மதத்தானை முகனைவென்ற மதத்தானை முகத்தானை வணக்கஞ் செய்வாம். (௪)

சுப்பிரமணியர்.

மருளாரும் பவத்தொடரை மாற்றியதென் னன்மகளாய மவுலி சூடிப், பொருளாரும் புவிவிசயஞ் செய்தரசு செலுத்தியமும் முலை பயூந் தேனைத், தெருளாருந் தமிழ்மதுரை நாதன்மணஞ் செயவிதிநூற் சடங்கு செய்தே, யருளாரு கடம்பவனத் துறைகுமர குருபரனை ‡ யகத்துள் வைப்பாம். (௫)

வைரவர்.

। கருதரிய வளிதபர னெற்றியிற்றோன் றிசூல கபால மேந்தி, வருபிரமனை யஞ்சுவற்றிப் பயிரவனு யண்டத்து வங்கண் மாற்றி, யரிசரும கஞ்சுகியாய வேதவெகி ஞார்ந்துமுன்போ லவையுண் டாக்கி, யிருமைபெறக் காத்தருளுங் கேத்திரபா லன்றிருத்தா ளேத்தல் செய்வாம். (௬)

திருநந்திதேவர்.

வரங்கருமா தவவடிவாஞ் சிலாதமுனி மகவாகி வளர்ந்தெட் டாண்டிற், பாங்குறுமா தவம்புரிந்து பரனுருவித் தியத்துவமும் பண்பா

---

‡ குமரகுருபரன் மும்முலைப் பூந்தேனைத் தெருளாருந் தமிழ்மதுரை நாதன் மணஞ் செய விதிநூற் சடங்கு செய்தது வேப்பத்தூரார் திருவிளையாடற் புராணத்திலே, திருமணஞ்செய்ததிருவிளையாடலிலே "ஆதிநான் முகன்மா லேத்த வரம்பையர் வாழ்த்தெ டுப்பச்,சோதிசேர் கானம் பாடத் தும்புரு நார தாதி,நீதறு சடங்கு மைந்தன் செலுத்தநன் முகூர்த்தத் தொப்ப, மேதகு மாதை வேத விதிப்படி மன்றல் செய்தான்." என்னும் இருபத்தாறுஞ் செய்யுளால் உணர்த்தப்பட்டது.

ற் பெற்றே, யோங்கயில்வண் சுரிகைபிரம் புழைமழுக்கம் மீசனுவக் குதவச் செஙகை, தாங்கிசெங் நடங்கயிலே காத்தருணங் நீசர்பதந் தலைமேற் கொள்வாம். (எ)

சமயகுரவருணருவா.

அடலமணைக் கழுவேற்றுந் திருஞான சம்பந்த ரடிகள் போற்றி, கட்லிடைக்கற் றூண்மிதப்ப வோதுதமிழ்க் கடலினடிக் கமலம் போற்றி, மடலவிழ்பூங் குழற்பரவை வாசலினம் மிறையிருதாள் வருந்த மீண்டுங், தொடர்வருந்தா தெனவிடுத்த சுந்தரன்பொற் றாமரையா ந துணைததாள் போற்றி. (அ)

திருவாதவூரடிகள்.

திருத்துருந் துறைகயிலேத துவாதசாந் தேசனருட் டேச னன் பின், பெருந்துறைவா ரிதிபடிந்து ஞானநீர் முகந்தகம்பேர்ந் திடித்த மின்னி, வருநதுமுல குயிாபபயிாகள் பவக்கோடை யாலவெதும்ப வாடா தோஙக, வருந்தமிழ்வா சகமழைபெய் தருள்வாத வூர்முகிலை யகத்துள் வைப்பாம். (௯)

சண்டேசுரநாயனர்; சஙகப்புலவர்; மூர்த்திநாயனர்முதலியோர்.

சைவசம யம்வளரத் தந்தைதா ளெறிநதசண்டீ சனருள் போற் றி, பைவளர்பாம் பணிபரனைப பாடியசங கப்புலவர் பாதம் போற் றி, மைவளர்கந தரனணியுஞ சந்தனமுட் டியதெனத்தன் வண்கை தேய்த்துத்,தெய்வமது ைாபபதியாண் மூர்த்திமுத லனைவரையுந் தெரிசிப் போமே. (௧௦)

சுநதரசாமந்தா.

தந்திரமார் படைகூடடென் றாசுதரு பொருட்டிறைநீ மெய்க் காட் டென்று, வநதரனு ரடியாரை யமுதுசெய்வித தவர்புசித்த சே ட்ம் வாஙகி, யிந்திரன்மா லயனிவர்க்கு கிட்டாவிப் பிரசாத மெல த்தா னுண்டு, சுந்தரனுர் தாளடைந்த சுந்தரசா மந்தனடி தொழுது வாழ்வாம். (௧௧

சிவபததா.

கருவனந்த யோனிகளிற் புகுந்துழன்று பல்லுயிருங் கவலா வண்ண, மருவனந்தஞ் சூழ்கடம்ப வனத்திருந்து மற்றையமெயத் தவங்க டோறு, முருவனந்த மெடுத்தகலை யொன்றுகித தாளுகவுதவுஞ் சொக்கைத், திருவனந்தன் முதற்காலங் களிற்பணியும் பத்தர்பதஞ் சிரமேற் கொள்வாம் (௧௨)

பாயிரம்.

வாழ்த்து.

வேதமா முனிவர் வாழ்க விளங்குமா னினங்கள் வாழ்க
பூதநா யகன்மெய் யன்பர் பொலிந்துசூழ் மதுரை வாழ்க
மாதமும் மாரி பெய்து மலிவளஞ் சுரப்பச் சொக்க
நாதனெங் கடவுட் டொன்னூ னலம்பெறப் பொலிக மாதோ. ()

முதனூல்வழி.

இறைவனந்திக் கருள்புரிய நந்திசனற் குமாரனுக்கங் கியம்ப வன
னே, னிறைதவத்து வியாதமுனிக் குரைக்கவவ னெடுந்தவத்துச் சூத
ற் கோத,மறைபுகலுஞ் சூதமுனி நைமிசா ரணியமுனி வரர்க்குக் கூ
று, முறைதெரிந்து நிறைவுதரு நீபவன மான்மியம்யான் மொழிய லு
ற்றேன். (கச)

நூல்செய்யத்துணிதல்.

திருந்துபுகழ்ப் பரஞ்சோதி மாமுனிவன் சிவனருளாற் செப்பு
மெண்ணெண்,பொருந்திவளர் திருவிளையா டற்புரா ணமுமிருக்கப
பின்னும் யானீர், தருநதரணி புகழ்பதினே ரததியா யததொர்வகை
சாற்றப் புககேன்,மருந்தனையான் விளையாடற கதையோதி யவையரு
ளும் வழக்கான் மன்னே. (கரு)

நூல்செய்தற்குக்காரணமும், மொழிபெயர்த்தவிதமும்.

சீர்வளர்தண் கடம்பவன மான்மியமாம் வடநூலைத் தெருளு ம
ன்பர்,லேர்வளர்தென் மதுரையில்வா ழீசனைப்பூ சனைசெயவோ ரி
யைந்த செல்வப், பார்வளர்ந்தோங் கியபுகழசேர் தலததோர்தென்
மொழியாகப் பகரென் றோத, நீர்வளர்பைந் தொடைவிருத்த யாப்ப
தனு லவாருளா னிகழ்த்த லுற்றேன். (கசு)

அவையடக்கம்.

புதிய கன்மொழிக் கிள்ளையைப் பூவையைப் பயிற்றி
யதிச யம்பெறக் கேட்டக மகிழ்வரா தரிப்போர்
துதிசெ யுந்தமிழ்ச் சொக்கனுண் டருளிய தொடர்பின்
முதிய நாவலர் கொள்வரென் புன்சொலு முறையால். (கஎ)

சிறப்புப்பாயிரம்.

பொன்னலர்பூங் கடம்பவன புராணத் தொன்னூற் பொதியமு
னி யகத்தியன்முன் புகன்ற வாறே, பன்னுபய கவிஞர்செவிக் கமுதமா
கப் பரனருளின் செழுந்தமிழால் விளங்கச் செய்தான், றென்னவரா
யன்புகழ்மாக் கண்ணனெய்தற் செல்வனுயர் தருமிலம்பூர் வீமநாத,

ன்னெறிதேர் புராணமுழு துணர்ந்தோன் கங்கை நதிகுலவேள்
பெருந்தொண்டை நாட்டி னானே. (௧௭)

நூலவரலாறு.

தெளிதரு தொன்னூ னெறியமு தொழுகு நாவின னுதற்றிரு நீ
றற, னொளிதரு மக்க வடம்புனை மெய்ய னுரகபூ டணனையெண்
ணுளத்தன், றளிதரு கண்ணீ ரானந்தப் பெருக்கின் றொன்மைமா தவ
னருட் பேய, னளிதரு குணத்தச் சூதமா முனிவ னயிமிசா ரணியத்
தை யடைந்தான். (௧௮)

வந்தருள் சூத முனிவனை வழுத்தி மாதவ ராசனத் திருத்தித
தந்துப சார வருகவிட் முதல தண்ணளி மாதவ வெமக்கு
மூந்திய காந்தத் தியம்பிய கடம்ப வனபுரா ணக்கதை முழுதும் [லும்.
புந்திகூர் நியம்பென் றிரந்திட வியாதற போறறியம் முனிவரன் புக.

பதிகம்.

ஆதிமா தவவசிட்டன் முதன்முனிவ ரகத்தியனை யடைந்த வாறு
நீதிமா மறையாக மங்களுயா நீபவன மான வாறுங்
கோதிலா வம்மறையா கமங்களுக்கு விரும்புமவரங்கொடுத்தவாறுந்
தீதுதீர் தருதீர்த்த மகிமையிவை யெனவிரித்துச செப்பு மாறும், ()

கனகவிர சிதவிரதந சபைகளிற்கண் ணுதனிருத்தம புரியு மாறு
மனகனுறை பெருங்கயிலை யான்றசிவ லோகவள முரைத்த வாறு
கனைகமழுமென மலாககூந்த லம்பிகையெண் ணுன்கறமும வளர்த்த
வினைகளற நாரணனு மாதவம்புரிந்துமிகுவரம்பெற்றவாறும்.[வாறும்

பொயயுரைத்த நான்முகனுர் பூசித்துப் பொயத்தோடம் போக்
கு மாறு, மெயயிலகு முருவாகி யீசனெண்ணெண் விளையாடல் புரி
ந்த வாறுஞ்,சையகிரித துன்மதவே டன்மதுரை யறியானத் தலத்தன்
பர்கருச், செயதுபகா ரங்களவிளை யோடுகதி யடைந்ததுமயான் செப்
ப லுறறேன். (௨௩)

தென்னவனுட் டினிலுயர்ந்த கதம்பவன மகிமையெவர் செப்ப
ற் பாலா, ரன்னதன்சீ ரொடுத்துரைகக லாருரைப்பா ராலவா யரனே
வல்ல, னென்னினும்யா னறிந்தவா றவனருளா லியம்புகின்றே னி
னிது கேண்மின், றொன்னெறிமா தவத்தீரொன் றவர்கேட்பக் கதை
விரித்துச் சொல்வான் சூதன். (௨௪)

பாயிரமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௫.

முதலாவது

வசிட்டாதியரகத்தியனையடைந்தவத்தியாயம்.

பொங்கியமா தவவசிட்டா புலகர்புலத் தியர்கண்ணுவர் பொரு
டேர் காசுக, ரங்கிராக கபிலாகவு தமர்கிருது பாராசரரம் பரத்து வா
சா,தயங்கியசத திபாசுமந்துச சயிமினிவர் வைசம்பா யனர்சு வாயுத்,து
ங்கரிபுச சோமரிய வககிரிதர் ககோளர்சொலலுங் தீர்த்த பாதர். (௧)

சத்தியமா தவாவிசுவா மித்திரர்சுகா பிருகுவற்சர் தனக்கொப
பாகு, நித்தியமா மிருகண்டு மாரகண்ட ராய்க்கியவற கியாகன்
னையச, சித்திபெறு கலிகன்ம டாசமுனி சிதேந்திரியர் வாமதேவர்,
பத்திபெறு சிவபாத வித்யர்பதஞ் சலிமுனியம் புலிப்பொற பாதர்.()

ஒருசடிலர் பிறங்குசிகா சடிலருயரிரும்புவனத் துள்ளோர பேர
றறுங,திரிசடிலர் சட்சடிலா சதசடிலா திகழ்சருவ சடிலா செவ்வே,
வரிசடிலர் மிண்டியொளிர் முண்டிதரா யதிகளா வரும னேகர, வி
ரிசடிலத தநிசிமுதன முனிவராமா தவத்துயாந்த மேன்மை பூண்
டோர். (௩)

வேதாந்தஞ் சுருதிமிரு திகளுணர்ந்தே திப்பொருளை விளங்
கத தோந்து, நாதாந்தத் துட்பொருளி னுட்பொருளா மநாதிபரம
பொருளை நாடிப், பூதாந்தங் கீழ்ப்படமேற றுவாதசாந் ததனிலே
பொருந்தக் கண்டோர், காதாந்தத் தினுமழியா நீறணிந்து கண்டி
கைமா லிகையும் பூண்டோர். (௪)

கறுத்திடுங்கா மங்கோத முலோபமோ கமதமாற் சரியங் காயந்
தே,வெறுத்திடுவோர் பொறையுடைமை மேற்கொள்வோர விரும்பு
பெருந் தவத்தின் மிக்கோர, றொறுத்திடுவெம் பவமகலச சிவபத்தி பூ
ணடிதயத் துள்ளே நாளுங், குறித்துணர்ந்து சிவபூசை வேதாக
மத்தடைவே கூர்ந்து செய்வோர். (௫)

புகழ்ந்திடுமான் மார்த்தலிங்கஞ் சுயம்புமுத லாமிலிங்கம் பூசை
செய்வோர், திகழ்ந்திடுதம் மிதயத்தில் விசேடித்து மானதபூ சனை
சேர்ந் துள்ளோர, ரகந்தெளிந்து சிவனடியார் யாரேனுஞ் சிவமெனும்
பா வனையாக் கொள்வோர், மகந்தருமம் பிகையானை முகன்குகனிங்
கிவர்பூசை வரம்பிற் செய்வோர். (௬)

இருக்கோவிட் டேத்திடப கந்திமுத னம்பர்கணத் தெவருஞ் சூ
ழ்ந்த, திருக்கோலக் கோயில்வலஞ் செய்திலிங்க தெரிசனமே நியம
மாகிக், கருக்கோல நீங்குசிவ தோத்திரங்கள் சிவநாமங் கரைத்துட்

கொண்டே, பெருக்கோலிட் டெச்சரித்து நிலைபெறுவை திகசைவம் பேணி வாழ்வோர். (எ)

பந்தமறு சிவஞான தீக்கையரான் சீடர்பல ரவர்களுஞ் சீட, ரந்தமிலா ரத்தகைய சீடரொடு திருக்கூட்ட மாகி யுலளோர், மூந்தச தா சிவப்பொருளி னிலையுணர்ந்து சிவகதையை முழுதுந் தேர்குஞ், சிந்தையராயப் பரகதியீ தெனவிதிநூ றெளிந்துகுரு பூசைசெய்வோர்.

இத்தகைய முனிவரரொண் ணாயிரவ ருங்காசி யடைந்தே மீளா
முத்திதரு மகிலேசன் றனைவணங்கி முத்திமண்ட பத்தின் மேவு
முத்தமமா தவவடிவா மகத்தியனை யஞ்சலிசெய் தவந்து போற்ற
நித்தியமா மனைவரையுங் கைதொழுதாங் குடனிருத்தி நேயங்கூர்ந்தே

வேறு.

இங்குநீ ரெய்த யான்முன் னெத்தவஞ் செய்தே னென்று
னங்கவர் முனியை நோக்கி யியம்புவா ரருந்த வத்தோய
கங்கைசூழ் காசி யீசன் கழல்பணிந் தேத்தும் பேறு
தங்கிய தெமக்கு நின்னாற் சாற்றுவ தினியொன் றுண்டால (க0)

அருள்வடி வாகுஞ் சொக்க னாடிய வறுபா னென்கு
திருவிளை யாடல் கேட்கும் விருப்பினேந் தெரித்தி யென்னக
குருபர னருளை வாழ்த்திக் கூறினன் முனிவர் கோமா
னிருண்மல மகற்றுங் காதை முழுதுங்கேட் டின்ப முற்றார். (கக)

பரவச மாகிச் சொக்கன் பதமலர் தியானித் தேத்தி
யரவஞ்சூழ் தலஞ்சே விக்க வாசைமிக் குற்றா ருற்ற
கரவறு கருத்தை யோர்ந்த கடமுனி கதம்பக் கானில
விரவுமன் புடையே னென்னோ டேகுதிர் விரைவி னென்னா. (கஉ)

எழுந்தனன் வசிட்டன் முன்னாந் தவரொடு மீசன் வேணி
வழிந்திழி கங்கை மூழ்கி வரன்முறை நீறு சாத்தி
மொழிந்திடு மக்க மாலை முழுதுமெய் பூண்டு வேதம
பொழிந்தமும் மதமா சித்தி புழைக்கைமா முகனைப் போற்றி. ()

ஆரணம் போற்றும் வார ணாசிசூ ழகில நாதன்
பூரணன் றுணைத்தாள் வாழ்த்திப் புவிமுழு துலகுக் கெல்லாங்
காரணந் தானா யீன்றுங் கன்னியா யமலை யாகும்
வாரணி களபக் கொங்கை மனோன்மணி பதத்தை யேத்தி. (கச)

உளங்கெழு மன்பாற் காக்குங் கொற்றவை திருத்தா ளுன்னிக்
களங்கம தெழாது நீக்கும் வயிரவன் கமழ்பொற் கஞ்சத

தளங்கெழு செய்ய பாதந் தலைக்கொடு வார்தற் சூழ
வளங்கெழு காசி யெல்லை வலங்கொடு வழிக்கொண் டானே. (கௌ)

வேறு.

தென்றிசை நடந்து சில்பகல் கழியச சென்றனர் சீவன்முத் தீச
ன், மன்றலங் கடம்ப வனமெதிர் தோன்றக கண்டனன் மலையமா
முனிவ,ரொன்றிய வன்பிற் பணிந்தருட் சொகக னுறைந்தருள கொ
டுக்குநற றலமீ,தென்றலுந தவததோ ரிறைஞசிவீழ்ந தெழுநதா ரோ
ததிஞர் கூடததுமா டினரால. (கசு)

ஆடியா னந்தக் கடலபடி பவரோ டரவஞசூ ழிரண்டியோ சனை
யா,நீடிய கதம்ப கானவெல லையினை வலஞ்செயதவ் வனததினு ணை
டிமா, றேடிய பரமா னமிர்தரு பமதாயத திருநதுமைங குரோசமு
ஞ சூழ்போந், தேடவிழ மலரிட் டேடததியுள் புகுநதே யிறைஞ்சின
ன கோபுர வாயில. (கஎ)

ஆலயம வலஞசெய தேததியுள் புகுந்தே யம்பொறறு மரைய
புன லாடி, மாலயன பரவு நீறணிந் தகக மணிபுனைந தஞ்செழுத்
தோதி, மூலமார் சிததி விநாயகன் றுணைத்தாண் முளரிதன் சென்னி
யிற் சூடிப்,பாலினேர் மொழியங கயற்கணு யகியைப் பணிநதுபோ
ற றினன்முனித தலைவன். (கஅ)

கிளைத்தெழுங் கருணை வெள்ளத்தின் மூழ்கிக் கிளாதரு மகாதி
மூ லமதாய்,முளைதெழு மமுத சுநதர விலிஙக மூாததியைக் கண்டு
ளங் களித்தான், றிளைதெழுங் கண்ணீ ரானநதம் பெருகத திருமுன்
னர் வீழ்ந்துதாழ்ந தெழுநதே, விளைதெழும் புளகந தோன்றிடத
தொழுதான் மேன்மையைப் பன்முறை துதிதது. (கக)

உண்மகிழ் சிறந்தா னருள்சிவ பததி சீவன்முத தியுமுட னடைந
தான்,கண்மய முதவுஞ் சிறசபை மூன்றுங கண்டிறை திருநடந் தொ
ழுதா, னெண்மலி யன்பின் வணங்கியே வலஞ்செய் தியன்முனி மு
னிவர ரோடும், வண்மைசேர் திருமுன் னுறுகாற் பீடத் தேறினன்
வரன்முறை யிருந்தான். (உ0)

வேறு.

இருந்திறை யஞ்செழுத் தியல்பி னோதிய
வருந்தவத் தவரொடு மன்பு தோன்றிடத்
திருந்துபஞ் சாக்கரஞ் செபித்துச் சென்மகோப்
மருந்தெனுங் கடம்பமா வனத்தை யேத்தினன். (உக)

அத்தக வுணர்ந்தவ ரங்கை கூப்பியே
முத்தமிழ் முனிவரன் முகத்தை நோக்குறு
மித்தகைதீர் கதம்பகா னத்தின மேன்மையாஞ்
சித்திர மாங்கதை கேட்குஞ் சிந்தையேம். (௨௨)

சுந்தர னுடன்முன் றொகுத்துச் சொற்றனை
வந்திடு கடம்பமா வனத்தின் வைபவ
முந்துதீர்த் தந்தல மூர்த்தி மான்மியம்
புந்திகூ ரந்தெமக் கினிப் புகலு வாயென்றார். (௨௩)

என்றவர் மீளவு மியம்பு வாகுணக்
குன்றமே கமலனின் குளிர்மு கத்தினி
னின்றும்வார் சிவகதை யமிழ்தை நெஞ்சுற
வொன்றிய செவிவழி யுண்டு தேக்கினேம. (௨௪)

தேக்கிய வெமக்கின்னுந் தெவிட்டிற் றிலலையான்
மீக்கொளு மாசைமேன மேலு மெனறவா
வாக்கினுன மொழிவது கேட்டு வண்டமி
ழக்கமா முனிவர னுவகை யெய்தியே. (௨௫)

வேறு.

சொக்கனரு ளாலிவைதொ குத்துரைசெய வோமென
றக்கணமு னித்தலைவ ருக்கருள்பு ரிந்தே
நக்கனையா நாரியக லானைமுரு கோனைச
சிக்கெனவி னைந்துறுதி யானமது செய்தான். (௨௬)

செய்தலுமு யர்ந்திடவெ ழுந்ததிரு வாக்குப
பைதலொழி வார்கள்சிவ பத்தரனை வோரு
மெய்துமிவை கேட்கவுரி யார்நம்முரு கேச
னுய்திறமு ணக்குமுன்னு ரைத்ததுரை யென்றே. (௨௭)

இன்னவுரை கொண்டனனம் மீசனுரை யென்று
மன்னுதமிழ் மாமுனிம கிழ்ந்திதி குயயங்
தன்னிகரின் மாதவிர்வி னுவினிர்த வத்தான்
முன்னியிவை கேண்மினென வேமொழிவ தானன். (௨௮)

வேறு.

முனிவீர்கா ளிக்கதை கேட்டு முற்றுற
வனைவரு மாசையுற் றுரைத்தி ராதலாற்

பணவரு பாக்கியத் தவரிற் பாக்கியம்
வினையறப் பெற்றனன் மேலுஞ் சத்தியம். (உக)

வேறு.

நீவிர்சிவ தவம்புரிந்த காரணத்தா லாசையுற்றிந் நினைவு தோன்றிப்
பூவுலகிற் சிவலோக கடம்பவனக் கதைகேட்கும் புந்தி வைத்தீர்
தேவர்தொழு மதுரேச னருளுடனங் கயற்கணருட் செல்வி யான
பாவையுமை திருவருளு நுமக்கேயுண் டாகுமிது பகர்ந்தே முண்மை.

பவமகற்று மானிடமாப் பாரினில்வந் துதித்தார்க்கே பத்தி பூண்ட, சிவனருள்பெற் றுரியதவஞ் செய்துசிவ புண்ணியமுன் செய்து ளோர்க்கே,யவமகற்றுங் கடம்பவன மான்மியங்கேட் கப்பெரிது மாசை யுண்டாம்,தவமியற்றா மானிடருக் கொருக்காலுங் கேட்கமன ஞ் சாரா தன்றே. (௩க)

சித்திவிநா யகனையருட் டிருவால வாயானைத் திருமெய்ஞ் ஞான, சத்தியையங் கயற்கணுமை கங்கையைநங் குருபரனுந் தார்வேற் சேயை,நித்தியமாய விளங்குநந்தி தேவன்முதற் கணங்களைநன் னினைவிற் கொண்டே, பத்தியினுங் கவாப்பணிந்து கடம்பவன மான்மியத் தைப் பகர்வாங் கேண்மின். (௩உ)

என்றுவசிட் டாதியருக் ககத்தியனுத் தரம்புகன்றே யியம்புங் கா தை, நன்றுபெரி தகமகிழ்ந்து படிப்போர்நன் குறக்கேட்போர் நனி கேட் பிப்போர், துன்றுபெரும் பவந்தொறுஞ்செய் தொலைவில்பெ ரும் பாவவினைத் தொடர்பு நீங்கி, யொன்றியபே ரின்பமுறு முத்தி யடைந் திடுவரென வுரைத்தான் பின்னும். (௩௩)

முதலாவது வசிட்டாதியாகத்தியனையடைந்தவத்தியாயம்
முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் - ௩௩.

இரண்டாவது,
வேதாகமங்கணீபவனமானவத்தியாயம்.

கேட்ட மாதவர் பின்னரும் விளம்புவார் கேடின்மா தவத்தோனே
கோட்ட மில்லதோர் கும்பசம் பவகுரு சேட்டனே தமிழ்க்கோவே
மூட்டு மாசையா லீசனைத் துதிக்குமுன் மூந்துதோத் திரஞ்செய்தாய
காட்டு நீபமா வனமெனுங் காரண முந்துற நவிலென்றார். (க)

அந்த வாசகங் கேட்டலு மியம்பிய வருந்தவ ருளங்கூர,வந்த வா றெலாங் கேண்மினென் றகத்தியன் மகிழ்ந்துகா தலைவாழ்த்தி, மூந் தை வேதத்தின் வடிவதாயப் பிரணவ முதலதாய மூலோத தோங்கு,மிந் த ராவணிச சொககளைப் பின்னுசெஞ் சிருத்தின னிசைக்கின்றான்.()

வேறு.

பண்டு ருத்திர னடும்பெருங் கற்பத்திற் பதுமன்
கொண்டன் மேனியன் முதலிய விண்ணவர் குழாமு
மண்ட ரண்டமு மொடுங்குகா லங்களவந் தடுக்கக்
கண்டு வேதமு மாகம புராணமுங் கலங்கி. (௩)

என்செய கேமெனப் பயங்கொடு கயிலையி னேகி
மின்செய் நுண்ணிடை மெல்லியல் விமலைபங் கினனை
மன்செய் மாதவர் துதிசெயுங் கருணைவா ரிதியை
முன்செய் நல்வினை பயத்தலாற் கண்டுகை முகிழ்த்தே. (௪)

அகில முங்கடந் தீன் றளித் தனுக்கிர கிக்கு
மிகலி லீசனே யெங்கட்கு முதல்வனே யிறைவா
விகல மின்றிய வுலகமும் புரந்தருள் விமல !
புகல ரும்பரப் பிரமமே போற்றியென் றெடுத்து. (௫)

விஞ்சு மித்துதி வேதவா கமங்கண்முன் விளம்பிச்
செஞ்ச வேதொழு தெழுதலுந் திருவருள் சுரந்தே
யுஞ்சு வாழுதிர் காக்குது நுமமையென றுரையா
வஞ்ச லஞ்சலென் றலாக்கர மமைத்தன னமலன். (௬)

அரந்தை தீர்தர வறத்துரு வாகும்வெள் ளேற்றைப் !
புரந்து நாசமுற் றிடாதருள் புரிந்தன மதுபோ
லிரந்தி ரந்துநின் றேத்திய நும்மையு மெம்பா
லிரந்த ரந்தொழு திருந்திடப் பணித்திடா நிற்பேம், (௭)

ஒடுக்குங் காலமற் றையோரொலா மொடுங்குவ ருண்மை
கடுக்கஞ் செய்துருத் திரனடும் பிரளைய நலியா
திடுக்க ணின்றியோர் விதத்தினும் பவித்திருந் திடச்செய
தடுக்கு நுங்கட்கு லயமிலா தாக்குது மென்றான். (௮)

இன்ன வாறா ணியம்பவே தாகம மியம்புங்
கன்னி பாகனின் னருளினித் தியம்பெறக் கடவோ

முன்னி டததுதித் துன்னையே யுணர்ந்திடப் பெறலாற்
பின்ன ரொங்கட்கு நினக்குமோர் பேதமொன் றின்றால். (௯)

அருததி கூர்தர வம்பிகை யேபுர்டுநின் றாடு
திருத்த முந்தரி சித்துநின் னருள்பெற வேண்டுங
கருத்த றிந்தடி யவாக்கருள் காரணக் கருணை
பெருத்த நின்னிடம் பிரிவிலா துறையவும் வேண்டும். (௧௦)

அந்த நல்வரந் தருகென வேதவா கமங்கள்
சிந்தை செய்துரை செய்தன திருவுளத தடைத்துப
பந்த பாசநீத தருடரும பரமனவ் வரங்க '
டந்த னம்முமக் கென்றனன் பின்னருளு சாற்றும். (௧௧)

வேறு.

கயிலைமா கயிலை யுமாசிவ லோகங கருதினம் முருவமூ விடத்தும், புயனிற வண்ண ரூன்முக னிமையோர் போற்றினா யணிந்து நின் றேத்த, மயலறு நந்தி முதற்சிவ யோகர் வழுததினர் கண்டுகண் டிறைஞ்ச, வியலுமொவ் வொன்றிற் இயைநதமும மூனறு சபைவகுத் தேர்பெற நடிபபேம். (௧௨)

பூவுல கினுநம் மன்பரா யுள்ளோர் பொலிவுடன் கண்டுகண் களிக்க, மேவர விளங்கு சபைபல வகுததே மெல்லிய லொடுநடம் புரிவோர்,தாவரு மந்தத் தலங்களெண் ணிலவாஞ் சாற்றுவ தாரவை விரித்து, நாவினுற் சேடன் முதலியோ ராலு நவின்றள விடவெளி தன்றால். (௧௩)

மாநில வரைப்பின் விசேடமாந் தலங்கள பலவுள வேறுமற் றவற்றுண், மேனிலம் பரவ நமக்குநூற் றெட்டுத் தலமிக மேம்படு மவற்றுட்,பானில வெறிகரும் வளைதவழ் பழனப் பதியுமொன் றிருபதாங் கதிகங், தூநலந் தருமத் தலங்களின் பெருமை தொகுத்திட லியாவர்க்கு மரிதால். (௧௪)

இப்படி புகழு மிருபத்தோர் தலத்துண் மேம்படு மொருதல மியம்பு, மெய்ப்படு சுயம்புர மிலிங்கங்கட் கெல்லாம் வோரதாயச் சமட்டிலிங் கமதா, யப்படை பிரளை யத்தினுங் கடையு காந்தத்து மழிவிலா திருக்குக், திப்பிய விலிங்கந் தன்னில்யாம் விளங்குஞ் சிவன்முத் தித்தல மூவதால் (௧௫)

ஆங்கதிற் சகளீ கரித்துநா மநேக லீலைசெய் திறைகுவ புவனி
ர், பாங்கொடு கதம்பத் தருக்களா லெழுக்குப் பன்னரு நீழல்செய
திருமி, னோங்குநும் பெயரால் கடம்பமா வனமென் றுலகியர் வி
ளங்குமத் தலமுந், தேங்கமழ் மலரால் செங்கழ லிணைக்கு சிறப்பி
னோ டருச்சனை செயுமின. (கசு)

* * சுயம்புவாய மற்றை யிலிங்கங்கட கெல்லாஞ சொல்லருஞ் சு
மட்டியாய முதலாயப, பயம்பெறு மமுதாயக் குளிர்ந்ததாய் நிறைந்த
பாவன மாமிலிங் கத்தி, னியம்பிய பரமா னந்தரூ பமதாயச சிவானந்
த ரூபமா மெய்மை, நயம்பெறு கயற்கண் மங்கையு நீரு நனகருச் சு
னைசெய விருப்பேம. (கஎ)

கணங்களசூழ தருமா கயிலையி லிருப்ப தொருகலை கதம்பகா ன
னத்தின, மணங்கம ழமுத சுந்தர லிலிங்கத தொனறொழி யாயிர மரு
வீப், பணங்கிள ருலக முழுவது நன்மை பயப்புறப பாவுமம பிகை
யா, மணங்கொடு மிடப வாகனத தெதிர்சென் றனபருக்கனபுசெய்
திருத்தும (கஅ)

இனனுமொன் றிசைக்கெம பெருங்கயி லையைப்போ லிரசித
பிரத்தினங் கனச், மன்னிய சபையூன றுண்டதி லதிக வைபவத் துட
னடம புரிவோ, மன்னமுச சபையி னிருத்தமுந் தெரிசித தாங்கெமக்
கணிநிழ லாகித், துன்னிய கடம்பும விலலமு மாகித தொலைவிலா தி
ருந்திடப பெறுவீர. (ககூ)

ஆகம மலருங் கொடிகளு மாகி மிருதிக ளனுசுக மாகிப
பாகமா ரிதிகா சமபல புராணம பஞசவன னக்கிளி யாகி
மோகமார் தருகா மாதிய நீதது முதறசிவ நாமமுச சரிததே
மாகமார் நுமது கொமபினில வதிந்து வனபபுற நீததழைந திடுமின்()

காலகா லங்க டோறுநன னியமஞ செய்யுமின யாவாக்குங கரு
ணை, யேலவே புரிமி னன்னிய சமய முற்றுளோ ரத்தலத தெய்திற,
சீலமார் சிவமெயஞ ஞானங்க ளுணாததித தெளிசிவ சமயத்துட
சேர்மின, பாலலோ சனனு லயந்தினந தொழுமி னின்னமும பகரு
துங் கேண்மின. (உக)

எச்சில்கான் றுமிழதன் *மலசலம விடுத்த லின்மொழி மடநதை
யர்ப் புணர்த, லச்சமொன் றின்றி யனனரை நினைததல் பாதலை யரு

---

* எசசில்கான்றுமிழதல் - எசசிலுமிழ்தல், கானறுமிழ்தல் எனப
பிரித்தெண்ணுக.

நதலபொய் பகர்த, னசசியே துயிற நமபல மூமிழத லன்னியர் தார தனத விரும்பல், வர்சசனஞ் செய்யு மசுசிபே றிழவு மனநினை யாத ன நினைத்தல். (௨௨)

கோமுகை சிவநின மாலியங கடததல் பலிபீடங குறுக்கிடல் ப லிப்பற், றேமுற மிதித்த லேறெுடு தூபி துவசதண் டியற்பலி பீட, மானமைசே ரிலிங்க மைநதினின சாயை மிதிததனீ றணியாது வருத, ருமமார் விளக்குச சாயைகல் லிலிஙகச சாயையிற றன்னிழ லிடுதல்.

பரிவுற திருவா ணதகொடு புகலபா தஙகழு வாதுபோந் திடுத, லொருவலம் வருதல் வலமவரும் போதி லோடியே வலம்வா லிநத, மருவரும பெரிய குற்றமெண ணுன்குரு சாரந்திடா வாறுகோ யிலு ட்சென, றிருவருங காணு நமையவண சேவை செயபவ ரெம்முல கிருபபார். (௨௪)

ஆசனத திருத்தன் மயிரது கனேத லாசையுற் றிடலெண்ணெய தேயததல், வாசநெய தேயததல் களுசுகந தரிதத றலேபாததன் மயிர கோதி முடிததல், போசனஞ் செயத னறியநீர் பருகல் பொருந்துவா கனஙகளிற் போத, லேசறு வட்டக் குடைநிழற் சேற லியாரையு மி கநதுதா டித்தல். (௨௫)

வண்டூகில போாதது வலம்புரிந் திடுதல் வணஙகுதல் சேவைசெ ய் திடுதன், மிண்டுறு கோபங கொண்டிடல் சிரசில வேட்டிகட டிக கொடு தொழுதல்,கொண்டொளி விளஙகுந தீவர்ததி பிடிததுக் கொ ளளுத லகாலததிற் குறுக, லெண்டகு சிவனே முன்னெடு பின்னு மி டபபுறத் தினிலுநின் றேததல். (௨௬)

சிவநிர வியங்கள் கவர்தல்கூ தாட்ல செயதிட லொருநமக்கார, நவையறு கர்ப்பக் கிருகததிற் செபஙக ளோமஙக ணமககாரம் புரி த, லிவையெலா மன்றி யாலயக குற்ற மின்னமு மனேகமுண் டிய ம்பி, லவைமெலா நீக்கி விதிமுறை சேவை செயபவர் நம்பத மடை வார். (௨௭)

அந்தியங் காப்புச†செழுங்கம லையினு மத்தயா மஞ்சிதம் பரத தினு, செந்தமிழ் நெல்லைப் பதியினுஞ் சேவை செய்பவர்க ளுநக தி கொடுப்போம், புந்தியாற் சிவன் முத்தமாந் தலத்திற் பொருந்து மெய் வேளையிற் றெழினும், பந்தபா சஙக ணீக்கியக் கணத்திற பாவுநங் திருவடி சேர்ப்பேம். (௨௮)

---

† அந்திக்காப்பு - சாயரக்ஷை. அநதி-சாயம் காப்பு-ரக்ஷை.

காலையில் வணங்கிற் புவனிமா தான பலன்றருங் கதிருறை யுச்சி
வேலையிற் றொழிலோ ராயிரங் கபிலை தானநல் லியபயன் மேவு
மாலையிற சேவை செயதிடிற் கோடி வழங்கிய கற்பக னடையும்
பாலுறு மன்பா லததயா மததிற பணிநதிடிற பரிமேதப் பயனும், ()

பத்திசே ரதத யாமததில் யாமே பல்லக்குச சொக்கெனும் பெயராய
நித்திய மாகுங காசியே முதலா நிகழததிய சிவதலந தோறுஞ்
சததியோ டினிதா யவணவண் வதிநது தஙகிய கலையெலா மீண்டு
சிததிசேர் திருவ னநதலி லொன்றாயத திகழ்தரு பூரண வடிவாய. ()

அருளுரு வாகி மனோரத முடைததா யனைவாகருந் திருத்திசெய குவதாய, மருளற் வநது வணஙகினாக கெல்லா மனநதெளி விபப தாய நிறைந்து, தெருளுறு ஞான வானநத மயததிற் சோப்பதாய்க் கருததறிந துதவும், பொருளதாயக் கருணை பொழியுமங் கயற்கட் பூ வையோ டிருநதருள் புரிதும். (௩௧)

ஆதலிற் றொழுங்கா லம்பல வவறறு ளதிபலன் றருந்திரு வனந தன், மாதொடு நாமும் பரவுமெய யடியார வரும்வழி பார்ததெதிர் நிற்பேம், பூதலத் துயர்நத செலவமு மனையும புகழுநன் கல்வியு மகவு ந், நீதகற றிடுமெய்ஞ் ஞானமுந தருவேஞ சனனநீா முத்தியிற் சே ரப்பேம். (௩௨)

நினைத்தவா றருள்வோ மாலயன் மகவா னெடுந்திசைப் பாலர் விண் ணவர்க, ளனைததுமற றுளவோ ரனந்தலிற் சேவை செயதுத ம் மரசிய லடைநதார், வினைததிற னகறறு மம்பிகை கமலை மேதினி காமகன் சசிமற், றினத்தவாந் தேவ கனனியர் தெரிசித் தியைந்ததங கணவரை யடைநதார். (௩௩)

அதிதிவந் திறைஞ்சி விண்ணவர்ப் பயநதா ளருந்தவர் தபோபல மடைந்தார், மதிகுலத தாச ரனேகர்முன றொழுது மாற்றலர்ச செ குத்தல காண்டார், துதிசெயற் கரிய சுரர்குரு போற்றிச சொற்க லை யுணர்குரு வானான், கதிதெரிந் திராமன் பணிந்திரா வணனைக க டிந்தரும் பழிகழு வினனால். (௩௪)

இந்துவந் திறைஞ்சித் தக்கனால் வந்த விரும்பிணி களைந்தன னி றைஞ்சி, வநதுமார்க் கண்ட னித்தியம் பெற்றான் றொழுதருச சுன ன்வலி பெற்றான், முந்திடிநாமே யறிகுவ மெவர்க்கு மொழிவரித

னாதலத் தலத்திற, சிந்தனை செயது பெறறுளோ ரினனு மனேகர்நீர சேவைசெய் திருமின். (ருரு)

அன்றியு முமையாள் சோமவா ரததை யனுட்டிதது வேண்டிய தடைநதா, மென்றுமவ் வாரம விசேடமாகு சோம சுநதரன் றனையவ ண் டொழுமின், முன்றிகழ பிரதோ டததிலவ விலிங்க மூாததிசாந நித்திய மதிகளு, சென்றவண பணிவோராக கிகபர முதவுந தெரிசித்த கு செழுததையுந் துதிமின். (ருசா)

சேர்ந்திடு மூலகி ரெழுமெய் யாகச் செறிதர வுயாவிராட் புரு டற், கேயந்தவா தார மாறினிற் கமலே யியனறநா வறபதி யருணை, யார்ந்தவம் பலஙகா ளத்திநற காசி யாறினமேற கயிலைமேற றுவாத, சாந்தமேற் சிவன் முத்திமா நகர்வாழ் தறபர னெவாககுமே லானே ன். (ருஎ)

மண்புன லனல்கால் வானகதிா மதிசி வன்வடி விலிங்கங்கண் ம ன்னுந,தண்பொலி கமலை நாவலசி ரருணை தடஙகொளகா ளததிதெ ன் றிலலை, விண்புகழ் திரிசி ராமலை சிவன முததமாந தலமவியன க ருவூ, ரெண்பெருந தலமுன னுகவொவ வொனறிற கியைநதா வி ருதல மியம்பும். (ருஅ)

இயம்புமத தலமோ ரறுபதது நான்கி னிலிங்கததுட் சொககலி ங் கத்திற், சுயமபுவா யாவுந தோன்றுமுன றோனறி விராட்டுறு து வாதசாந தமுமாய்,நயமபெறு மதியா யமுதயிா வளர நல்கலாற சோ மசுந் தரனுய, வயஙகொளசி வனுககுஞ் சிவனு யீசன் மன்னலா லதி கமா மதுரை. (ருக)

கதித்தெழு முருததி ரன்னமும் பிரள யததினுங கறபவந தததுந, துதிததிடுங கருணை சோபதி நமைபபோற் றொன்மையா யழிவி லா திருக்கும்,பதிததுவ மாகு மெமககுநீ நிழலாப் பதியினுங கேகுமி னென்னு, விதிததனன் வேதா கமஙகளுக கன்பின் விடைகொடுதே தரு ளினன் விமலன். (சுO)

நம்பெருங கயிலை நாயகற் றெழுது நான்மறை யாகம புரா ண, மெம்பிரா னருளைப் பெற்றன மெனறே யெழுந்துள மகிழ்சசி கொண் டேகி, யும்பர்சூழ் சிவன் முததமாந் தலத்தி னுறுதபோ பல த்தினு லடைந்தே, யம்பொனு லஞ்சூழ் தருடருஞ் சொக்கை ய முதலிங் கத்திறகண் டிறைஞ்சி. (சுக)

தளிரொடு புதிய மணமலர் பொதுளிச் சாயையாய்க் கவடூது போக்கித், துளிர்தரு கதம்பத் தருக்களாய் முளைத்த சுந்தர லிங்கத்தைச் சூழக், குளிர்நறு நிழல்செய் தமர்ந்துதம் மலர்நற் கோதையங் கயற்க ணுமையை, மிளிர்பெருங் கருணைச் சொக்கநா யகனைப் பூசித்து விளங்கின தழைத்தே. (௪௨)

இன்னகா ரணத்தாற் கடம்பமா வனப்பே ரியைந்தது மதுரைமா நகரம், பன்னுமிக் கதைகேட் பவர்படித் திடுவோர் பரவுவோ ரார்ந்துசெய் பவமுந், துன்னியே யரியா மறசெயும் பவமுந் தொலைந்துடன் சிவகண மாகி, மன்னுவர் கயிலை யென்றுமா தவர்க்குப் பகன்றனன் மலயமா முனிவன். (௪௩)

இரண்டாவது வேதாகமங்கள்பவனமானவத்தியாயம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௦௧.

மூன்றாவது

வேதாகமங்களுக்குவரங்கொடுத்தவத்தியாயம்.

செப்பியபெ ருங்கதைசெ விப்புலனி றைத்தா
ரொப்பரிய மாதவமு னித்தவரு ரைப்பா
ரப்பணிச டைப்பரனு னுக்கிரக முற்றுய
முப்பொருளு ணாடிமுரு கேசனருள் பெற்றுய. (௧)

பந்தமறு ஞானசிவ பத்தியினமு திர்ந்தாய
விந்தவரை யந்தரபி லம்புகழி தித்தா
யந்தமுற யாவையுமு ணர்ந்தறிய வல்லா
யெந்தைதமிழ் மாதவவெ மக்கருளு கிறபாய. (௨)

விருத்திடுமு கார்த்தமும வாந்தரமு மன்று
வுருத்திரன மெய்ப்பிரானை யம்பெரிது மோங்கு
மருத்தியொட றிந்ததெவ ளுகம்பு ராணந்
திருத்தமுறு வேதமலை தென்மதுரை தன்னை. (௩)

வெற்பிருத டங்கயிலை வீறுசிவ லோகம
பொற்புறுமிம் மூன்றுமழி யாதவைபு கார்ந்

ருற்பவமூ றும்பல்லுல கியாவையுமொ டுங்குங
கற்பமத னிற்பொருவில் கந்தனுல கந்தம. (௪)

ஆதலினு யர்ந்தெழுச லப்பிரளை யததிற
பூதலம றைந்திடமெ திறபொருவி ருணங
தீதறவி ருந்ததெவ னவ்வுழிதெ ரிநதே
யேதமறு நீபவன மானதெவ ணேகி. (௫)

களங்கமற வந்திடமேக் காலவிருத தாநதம்
விளங்கவவை மீளவும்வி ரிததுரைசெய கெனரு
ருளங்கொளும கத்தியனு னைககுமவை யுன்னு
வளந்தறிவி ரேகியவ ருககருளசெய வானல. (௬)

ஆதிகயி லைககிறைவே தாதிகளை நீவிர
போதிரென வோதியவந நாளவைபு குஙகான
மீதெழுச லப்பிரளை யம்பரவி மேன்மேற
கோதிலுல கங்களவை கொண்டனவ றிநதே. (௭)

மாறுதலில் வெள்ளமும றைததிடுத லாலே
யாறுதல மெபபடிய றிந்தடைவ தைய
வீறுதரு மப்பதியின் மேன்மையடை யாளங
கூறுதியெ னததொழுது கூறவிறை கூறும. (௮)

வேறு.

உரைத்த வேதா கமமேயா முரைககே முயர்ந்த சிவன்முததி
புரத்திற் கிரண்டி யோசனைககுப் புறஞ்சூழ்ந தங்கிப புரிசையதா
கிரக்குஞ் சலமத் தியிற்சோதி நிறைந்த தம்பம் போல்விளங்கும
வரத்தி னுயர்ந்த தென்பாண்டி வளநா டுறையு மங்கரம. (௯)

தேவர் பரவும் பரங்குன்றந் திருவே டகந்தண் சோலைமலை
மேவி யுறைநம் பொன்னனையாண் மெயப்பூ வணையிப் பதிநான்கு
நாவின் முனிவர் புகழ்தாரான் கெல்லை சூழ கனிவிளங்கும்
பூவி னுயர்ந்த சிவன்முத்தி புரமத் தலங்க ளடுவோங்கும். (௧௦)

போதி ரெனவே தாகமங்கள் புகன்ற வடையா ளத்தடைந்தே
சோதி மயமா மத்தலத்திற் சும்பா யெவர்க்கு முன்றோன்றி
யாதி கமட்ல் கடந்துவே ரப்பா லாகி யண்டாந்த
மீது வீர பதங்கடந்து துவாத சாந்த மீப்போகி. (௧௧)

நிறைய வெங்கும் வியாபகமாய நீள்சன் மயச்சின் மயமாகி
யுறையு மமுத மயமாகி யுருவி யோங்கு மிலிங்கமிதென்
றிறைவ னமிழ்தா னனோந்திருக்குந் தலமைங்குரோசவெல்லையிதென்
றறவ னருளாற் கண்டதருட் புணையா லடாந் நீரகடந்தே. (கஉ)

இதுவே சிவன முதந்திபுர மிதற்கு நிகரோர் தலமின்று
லதியா தகளாச சிவமெனவேட் டுவனகைப புழுப்போ லாககுமென
முதுநான மறையு மாகமமு முன்னாத துதித்தத தவோபலதநிப்
பதிநாம வந்தே மெனகீபத தருவா யிருந்து பரவியதால. (கரு)

தருக்க னெல்லாஞ் சிவாகமஙகள் சாறறு மிருதி சாத்திரங்க
ளுருக்கும் புராணம புள்ளினங்க ளோங்கும் பதினெண விதத்தைகளு
மருககொண டலரு மலாமரஙக ளாகு மனிதர் சிவகணமா
மிருககு மொழிதெனமதுரைநகாககிணையாமோமற ெருருதலமே. ()

வேறு.

சிலையுரு விலிங்க மருமபுனல் கஙகை செறிநோ சுரரொலி வேத
மலாதருத தருவாத தேனுநல் லினப மருந்துதல வேளவியூண் பூசை
நிலைதுயில சமாதி செலலவல முனன றியாணீளசொறசெபமவீழ்தல
பலாபுகழ வணகக மாவது மதுரைப பதிககலா லெங்ஙகாகுளதே.()

நுண்ணுணா வுதவுங கயிலையி லுறையு நூறறுமுப பானறு கோடி, புணணிய தீர்த்த மவற்றினை யுமையாள பொற்புடன் கொணாந்தா பிககு, வணணமார் தருமப பதியெலா நிறைநது மருவிமூழ கினர்ககரு டாலா, லெணணருஞ சருவ தீர்த்தமா புரபபே ரியைநதது மதுரைமா நகரம. (கசு)

அளபபரும் வாவி குளங்கிண றோடை யனைத்துமத தீர்த்தங்கண் மயமாங்,கிளபபருங் கலியின மறைநதவை யிருககுங கிரீசனு ரருளி னோர் கஙகை, யுளப்படுங் கிருது மாலிகை வேக வதியெனு நதியிவு ய்த் திடுவோம்,வளபபடு முதநி மூழ்கினர் பெறலாம் மதுரைநன மு த்திமா நகரம். (கஎ)

வைகைமா நதியி னிறந்துளோ ரென்பு வளர்சிவ லிஙகமா மதனை, யையுறீர் நீருங் காண்டிர்கா முறைதத தந்தியுயு மியாவருங் காண்பார், பொய்யல வின்று காணையுங காணும் போதெலா மதிசயம பூணும், வெயயபா தகரே யாயினுஞ் சிவமா மேவலாற் சிவன்முத நிசம். (கஅ)

காசியி லிறக்கத் தில்லையைக் காணக் கருதருங் கமலையிற் பிற
கக, நேசமா ரருணா சலந்தனை நினைக்க நிலைபெறு முத்தியிந் நான்கு
ம, பேசுமித் தலத்தா மின்னுமோரா விசிட்டம பேசுவாங் கேட்கவே
முத்தி, வாசமா யினரா குவர்சிவ் மீசன் வாசப்போ பெற்றதான் ம
துரை. (௧௯)

சுந்தர லிங்கச சுற்றினு நீபத் தருக்களாந் தோணமரங் களினு
மந்தரி கயறக ணமமைமையச சூழு மணிநிழல விலலுவத தருவின
கந்தரங் களினுந் தவழுபுயல வானக கறபக மலாநவ மணிகள [றும.
சிந்தின பொழிந்து சிவாகமினை யதனுற சேவைசெய திருந்திடுமென
வேறு.

காலினற சூழந்த நீபங கமழதரு கணணீர வாரப
பாலினற கவடு தாழப படிந்தெழுந் தசையுந் தோறற
மாலினு ரிடந்துங காணு மதுரைநா யகனபொற ருளிற
சாலினுண் மலாக வேித தலையினுல் வணஙகல போலும. (௨௧)

மையுறு மலாபபூங கொமபா வநதுவந தசையுந் தோறறம
பொயயுறு கபடாற போகமிப புனிதனைப பிரவரு சததி
னெயயுறு விளக்கின விடடில் போலவிழா நீஙகள வமமி
னையுறி ரெனக்கை காடடி யழைபபன போனறு தோனறும.(௨௨)

ஒளிய நீப வேதா கமமுப நிடத மான
இள்ளைகள புராண நூலசாத திரஙகளா மிருதி யான
புள்ளின மிவைகள் செரகக புராதன லிலிஙகந தனனை
யெளளரு மலரிட் டனபா லின்புறத துதித்த தனறே. (௨௩)
வேறு

உலகம னைத்தையு முருவிமு ளைதெழு மொண்சோதி
நிலவுப ரப்பிர மப்பொரு ளாகிநி றைந்தோங்கி
மலாதரு சுந்தர லிங்கம்வ னபபொடு கண்டேமே
பிலமுறு நறறரு மததினர் நாமே பெரியேமால். (௨௪)

ஆதியு மந்தமு மிலலதொ ரொப்பிட லரிதாகிப்
போதமு றுஞ்சிவ யோகர்தி யானப பொருளாகி
மீதெழு சுந்தர லிங்கம்வி ருப்பொடு கண்டேமே
பேதமி னற்றரு மத்தினர் நாமே பெரியேமால். (௨௫)

வீசுறு சோதிச டத்துவ மாமெய்ப் பொருளாகி
மாசுறு பாவமொ ழித்தடி யார்க்கருள் வாழ்வாகித்

தேசுறு சுந்தர லிஙகமி வணடெரி சிததேமே
பேசுறு நறறரு மததினர் நாமே பெரியேமால. (உ௬)

அருமறை யினபொரு ளாநா தமும்விந துவுமாகி
யொருமைத ருஙகயி லைகிறை யாகியு ளாபபோதங
கருமவி னநதெறு சுநதர லிஙகங கணடேமே
பெருமைபெ றுநதரு மததினா நாமே பெரியேமால. (உ௭)

வாணிய யனபொ றி மாலறி தறகரி தாயனறே
ரேணியல் பூசையு வநதா சுதவிய விறையாகிக
காணிய வினபுறு சுநதா லிஙகங கணடேமே
பேணிய நறறரு மததினா நாமே பெரியேமால. (உ௮)

அறஙகெழு மமபிகை பூசையு வநதவ ளகமேவி
நிறஙகிளா கறபவ ரமபிறு மொருகித தியமாகித
திறஙகெழு சுநதர லிஙகமி வணடெரி சிததேமே
பிறஙகுபெ ருநதரு மததினா நாமே பெரியேமால. (உ௯)

உருததிர னுககுமூ தறகா ரணமா யொன்றுகித
திருததது வாதச வநதரி றைநதெழு சுடராகிக
கருததைய றிநதருள் சுநதர லிஙகங கணடேமே
பெருததிடு நறறரு மததினா நாமே பெரியேமால். (௩0)

என்றுது திததெமை யாளுதி காவா யிவணென்று
நின்றுக ளிததவை நின்சர ணேசர ணெனவோத
வொன்றுமி ருடடெறு மாமதி கோடியு திததெனன
மின்றிகழ சுநதர லிஙகத் துறைசிவன் வெளிவநதான் (௩௧)

வேறு.

நீரும் பிறையு மறுகு நிலவுஞ் சடையிற் றுழ
வாருங் கரததின மழுமா னபய வரதந் திகழப
பாரும் புகழ்பொற பூணும பணியா ரமுமே லொளிரக
காருண் ணியமா முகமுங கண்ணுங கருணை பொழிய. (௩௨)

கதிக்குந் திறல்சேர் சிவமா கணமெம மருங்கு நெருஙக
விதிக்கு மயன்மாின் முதலாம் விண்ணோ சயவென றேத்தத்
துதிககுஞ் சிவன் முததித தொன்மைப் பதிமெய யன்பர்
பதிக்குஞ் சிவதோத திரத்தாற் பணிநது பரவிப் புகழ. (௩௩)

துகிர்மால் வரையிற் படர்ந்து சூழும் பசும்பொற் கொடிபோல்
வகிர்மா மதிநேர் நுதன்மா துமையா ளொருபான மருவ
வுகிர்மா வலியா ளரியா யுணரா விறற்சந் திரனை
வகிர்மால் விடைமேற் றோன்ற வந்து காட்சி கொடுத்தான். (௫௪)

கண்கள் குளிரக் கண்டே தொழுமபுன் வேதா கமத்தைப்
பண்கணி மிழற்றும பெருமான பரிவின் னருளா னோக்கி
விண்கள் பரவ நமக்கு வேண்டும வரங்கேண் மினென
வெண்கள் கடந்த பொருளே யெனப்போற் றிசெய்தங் கியம்பும். ( )

வேறு.

எம்பெயரான முத்திநகர் கடம்பவன மெனுநாம மியைய வே ண்டு, நம்பெருமான் முன்னருளிச் செய்ததுபோ லித்தலத்து நாங்க ள் காண, வம்பைகற கண்ணியுடன பெருங்கயிலா யச்சபையி லய ன்மா லாதி, யும்பர்தொழப் புரிநடன மிங்குநடித் தருட்கருணை யுத வ வேண்டும். (௫௬)

எங்கணிரு வினிவடிக்கு நின்னடங்கண் டேத்துபவர் யாவ ரே னுந், துங்கமுறு கயிலைநடந் தொழுதபய னடைந்துபவந் தொலைக்க வேண்டுந், தங்கியிவண் வசித்திடுவோர் தரிசிப்போர் பூசிப்போர் சாற்றக் கேட்போ, ரங்கவாக ணின்னருளா லெல்லோரும் பரமுத் தி யடைதல் வேண்டும். (௫௭)

இவ்வரந்தந் தருளுகென வேதவா கமங்களெடுத் தியம்ப லோ டும், வெஞ்சுரந்தின் றயில்படைக்குஞ் சூலிபுகல் வான்மெய்ம்மைத் த லம்வி சேடங், குவ்வரந்தான் பெறுதலினுங் கூறுமரா தியினிருமித் திடுத றன்று, லவ்வரந்தந் தனநமக்கே கடனமுமப் படிகாண வனிப் பே மென்றே. (௫௮)

மாகயிலை நடம்புரியு மூர்த்தம்போ லித்தலத்தும் வசிப்பே ஙா மே, யேகமெனும் பரசிவமா மங்கயற்க ணிறைவிபரா சத்தி யாகு, மோகமற வெமைநாருள் யாரேனுந் தரிசிக்கின் மொழியக் கேட் கிற், போகமொடு புகலரிய முத்தியுமுண் டாமின்னும் புகலக் கேண் மின். (௫௯)

சென்முத்தி புரமிதனு கிருமித்த சிற்சபையுமூன் முவற்றைச் செப் பி, லோவறகா முறையிலிக்கத் தின்கிழக்கத் திசையினுக்குத் தாமீ சா

* சந்திரன் - இரணியன். சந்திரம் - இரணியம்.

ன,மேவுமவை பெயர்விளம்பி லிரசிதம்பொன னிரத்தினமென் மு
றையே மேவு, மேவயிலித தலமதிக மெத்தலமு மித்தலத்துக் கிணை
யொவ் வாதால். (௪௰)

தூரத்தே கண்டுசேவைத தூபிதொழு தாறபிறவித தொடாபு நீ
ஙகிக், கோரதடே கோடிசென்மத தாறறுபவங தொலைந்துகதி கூடு
மெனறு, வீரதடே மலர்ககடமப வனததனுகிச சிறசபைகண டிறை
ஞசி யனபின, வாரதமே வெனததுதிபபோ பெறுமபேறிவ் வள
வையென வகுககற் பாறறே. (௪௧)

மாாகழியா திரைசோம வாரமா தபபிறப்புப் பிரதோ டஙக,
ளோகெழுநற சிததிரா பூரணைவை காசிபபூ ரணையெங் காளு, நீா
கெழுசித திரைவிடுவைப பசிவிடுவித தினஙகளினங் கிருததங கண்டா
ற,சீாகெழுஙக கருணையினுற போகமொடு முததியுமுண் டாகுந் தி
ண்ணம. (௪௨)

இஙகுமக்கு மாாகழியா திராநாளி னியைநதிமுத் தாபபொன்
மன றிற, றுஙகமுறுங கயிலாய நடஞ்செயவோ முனிவாசுரா துதி
சேர் யோக, ரஙகமலக கணணன்மலாக கணணனரும புலிமுனியா
டரவங காணப, பொஙகுமிா சிதசபையி லாாதிசதா சிவஙிருததம பு
ரிவோ மென்றும். (௪௩)

ஈசான திசையிலிரத் தினசபையி லஙகயறகண ணிறைவி கா
ணத, தேசாரு மானநத சிஙகார நடமபுரிதல் செயவோ நீஙகள், கூ
சாது காண்மினென வரஙகொடுததுக் கூறுமிலிங் கததி ஞனுன்,
காசாரும பவமகறறுஞ் சொக்கனருள செயததுதங கருததி னெ
ணணி. (௪௪)

கதம்பவன மாகியவே தாகமஙக டிருநடஞ்சொல் லியகாட்
காண்பான், புதம்பாவி யிருநதனகம முருகனுரைப் படிபகாக்தேம்
பகருங் காதை, திதம்பெறககேட் போர்படிபபோ ரொருநூறு செ
னன்த்திற் செயத பாவ, விதமபலகோ யகன்றிடுவர் தீாததமெலா
மூழ்குபயன் மேவு மன்றே. (௪௫)

எத்தனையா கங்களுள வத்தனையும் புரிந்தபய னெய்துங், கூட,
னித்தனரு ளாற்பாம முத்தியுமெய் துவருண்மை நிகழ்த்தி னேமெ
ன், றுத்தமமா தவர்கேட்ப வகத்தியனங் கியம்பினன்கேட் டுவகை

கூறுந்து, புத்தமுதா மெனவிளங்குந் தீர்த்தமான் மியத்தையினிப் புக லவா மென்றார். (௪௯)

மூன்றாவதுவேதாகமங்களுக்குவரங்கொடுத்தவத்தியாயம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௪௭.

நான்காவது.

தீர்த்தமகிமையுரைத்தவத்தியாயம்

அருந்தவ ரியம்பக் கேட்ட வகத்தியன் சொல்வா னீதி
பொருந்துறு சிவன முத்தி புரத்துறை தீர்த்த மாவுந்
திருந்துறப் புகலவாங் கேட்டோர் சிவகதி யடைவ ரென்று
மருந்தினு மினிய செவ்வேண் மலரடி தொழுது கூறும். (௧)

முந்திய தீர்த்தம் பொற்றா மரைத்தட முதன்மை யாக
வந்தவுற் பவமுந் தீர்த்த மகிமையுந் தொகுத்துச் சொல்வோம்
புந்தியி னினிது கேண்மின் பாதகம் போக்குஞ் சோம
சுந்தர னுக்கை யானீச் செந்துக்க டோன்றுந் தீர்த்தம் (௨)

ஆதிகா லத்தின் வந்தே யுருத்திர னடுங்கற் பத்தின்
மீதெழுந் தோங்கி முந்நீர் வெள்ளமு மிருளு மூடிப்
பூதல முதலா யுள்ள வுலகெலாங் குலைந்து போங்கால்
மேதகு கங்கை யாதி நதிகட லவணமே கங்கள். (௩)

மற்றுள சிவத லங்க ளியாவுமுன் மறைந்த தாங்கண்
கற்றைவார் சடையெம் மீசன் கவுரிக்குத் தனது லீலை
முற்றுறக் காட்டு வானமுன் சகளமாய விடைமேற் றோன்றி
வெற்றிமான் மழுவோ டங்கை மிளிரவா தாப யங்கள். (௪)

விளங்கிட வயன்மால் விண்ணோர் மிக்கநந் தீசன் முன்னு
வளங்கெழு கணங்க ளோடும் வந்துநீர்ப் பிரளை யத்துட்
களங்கற மறைந்தி ருக்குங் காசிதென் னருணை யாரூர்
துலங்கலின் முதுகுன் றாதி பருப்பதந் தொழுங்கே தாரம். (௫)

ஈங்கிவை முதலா மற்று மியம்பிய தலங்க ளெல்லாம்
பாங்குறும் பிலைக்குக் காட்டிப் பண்பினாற் றானுண் டாக்க
வோங்கிய சிவன் முத்தி புரத்தில்வக் துயர்ந்த வெள்ள
மாங்குறு வாறுஞ் சோதி லிங்கமு மடைவிற் காட்டி. (௬)

இசசையா யிவவி லிஙகத துறைகுவ மெந்த ஞானறு
முசசகம புகழு மிநத மூலலிங கத்தி னினறு
நிசசய மாக லீலை செயவது நினைஙதே மென்றே
மசசமா விழிகதும போற்று மானமுத லோர்ககுங கூறி. (எ)

பின்னரும் புகல்வா னினற பிரமனமான் முதலி யோரை
முன்னரு மிலிஙகங் தனனி லுமையையு மெமையும் பூசித
தின்னருள பெறறு நீவி ரேகுமின் கயிலை யாஙகு
மன்னுவங கலையொன றிஙகு வைகுவ மனநத மாகி. (அ)

என்றிறை யிலிஙகத தாஙகா விருஙகண நாதா யாரு
நனறறி யயனமால விண்ணோ நாதனே யென்று போற்றித
தொனறுதோ நிலிஙகம் பூசை செயததொழப் பரிசித தேதத
மன்றவே நினைககப் போக முததியும வழஙகுந திண்ணம. (க)

ஆதலாற சொகக லிஙகத தருசசிப்பா ருசை யுறறேம
போதுதோ றமிடே சஙகள புரிவதற கிவணோ தீரதத
நாதநீ யளிக்க வேணடு மெனறவா நயாநது போறற
மாதொரு பாக னுஙகு வரஙகொடுத தியறறல் செயவான. (கஂ)

ஆனறதன னிலிஙகத தஙகி திசையிறசென் றவனி விளள
வூனறினன சூலங கீழபோயப் பிரமாணட கடாகத தறறே
யெனறுறப பாயநது தாககிற றவனுநித தெழுநது பொஙகித
தோன்றின பிரவா கமபோற றெழுததரும் புனித தீரததம. (கக)

அனனது வாலு மெஙகோ னுஙகணோ வாவி யாககித
தனனுயா முடியில வேணி தரிததமென கஙகை நீரைத
துன்னுமங நீரில் விடுத்த தொழுஞசிவ கணத்தை நோககி
முனனுறக காணடி யொன்னுக காட்டினன மொழிவ தானுன. (கஉ)

வேறு.

ஈது கேளுநா மாதியி னிருமித்த வியல்பா
லாதி தீர்த்தமாந் தரிசிக்கி லருமபவம போக்குந்
தீது தீர்க்குமூ வுலகினுட் டீர்த்தஙகட் கெல்லாஞ
சோதி சேர்பர மாகையாற் சொலும்பர தீர்த்தம. (கங)

கையி னுற்றொடிற றரும்பயன் கருதய மேதம்
வைப் முய்யுகாங் தருதலால் வளர்சிவ தீரததஞ்
செய்ய ஞானத்தை கல்கலாற் றிகழுஞான தீர்த்தந்
துய்ய முத்திதந் தளித்தலாற் றொழுமுத்தி தீர்த்தம். (கச)

சறுவ தீரததமு மொலேகலாற சறுவதீர்த தமுமா
மறுவில சூலததண் டாகையால வீண்சூல தீரததம
பிறிவி லாவிதின் மூழ்கியே யிருடியர் பிதிர்க்க
ணிறுவு தேவரைத தருப்பிக்கிற பவமெலா நீஙகும. (கரு)

பன்னு தீர்த்ததின் மூழ்கிமம பரையையு நமையு
முன்னி யேபணிந தெழுந்தரு நூற்றெட்டா யிரதநெட்
டினன றீரவரு செழுததினை யியலபினுச சரிததே
மன்னு தோததிரம பிதககணஞ் செயிறபவ மாறும. (க௬

இயஙகு தீர்த்தநீ ரொருமுறை தெரிந்தெமை யாட்டில
வயஙகு கங்கையா தியபுவி மருவுதீரத ததாான
முயஙக வாட்டிய பயனுறு நீவிரு மூழகி
யுயஙகு மன்பினி லாட்டியே யுரைததவா செயுமின. (க௭

எனவு ரைத்தனன ருளுமம பிகையுட னிறஙகிப
புனித தீர்ததநீர் மூழ்கினன போற்றிய கணஙக
ளனைவ ருக்குநன் கருளின னீவிரு மாமுமெ
வினைய கற்றுமீ தென்றிலிங் கததின்மே வினனுல (க௮

மீள வுஞ்சக ளீகரித துமையுடன் விளஙகி
யாளு நாயகன் றீரததவா விக்கரை யமாநதெந
நாளு நல்லருள் புரியுநற கணததர்மான முதலோா
கரள கநதாற பூசித்துக கயிலையை யடைநதாா. (கக)

புவியின் மேம்படு தீரததகதி னுறபவம புகன்றேம
விவித மாமதன் மகிமையைத் தொகுத்தெவா விரிபபாா
கவிலு மன்னது தரிசிக்கிற் பவமெலா நசிக்குங
குவிலு றும்பல தீர்த்தமா டியபயன் கொடுக்கும. (௨0)

மூனறு நாளொரு காளதின் மூழ்கிலெப பவமுன
னேன்றி டாதவை நீங்குமுன் னியமபிய பயனுந
தோன்றும் வில்வுவத் தடிமண்பூ சிததுளொந் தாடி
யூன்று மப்பயன் சோடச தானமு முண்மை. (௨க)

பததி யின்றியே மூழ்கினுங் கனல்பரி சிக்கிற
றொத்தி யேசுடு மாங்கது போற்பவந் தொலைக்கும
புத்தி கூர்ந்துநற் சுவர்க்கமெய் துவர்சித்தம் புனறோய்ந
தத்தி னுமுத்தி மக்கிர நீரினி ததிகம். (௨௨)

உலகி லுள்ளதீர்த் தங்களி லுத்தமோத் தமமீ
திலக மூழகியே தேவதர்ப் பணமதி லியற்றி
லலகில யாகஞற பயனருந தவஞ்செபங் தானம்
பலக லைப்பயன் றருமபொற்ரு மரைத்தடப் பாங்கா. (௨௩)

செய்யி லொணரொரு கோடியாம பிறநதா ளினிறசென்
றுயயு மாறுமூழ கிறசெனமாங் திரபபவ மொழியு
மையில சிததிரை காாததிலக மாகஙற றிஙக
மெயய மூன்றினுங் தோயநிடக கிட்டுத லரிதால். (௨௪)

சொகக னலலரு ளாலதிற கிட்டுமேற் சொன்ன
மிகரு யர்நதிடு காளினு மிகுபலன் மூழகிற்
புக்கு கிததிய மூழ்கிய பலததினும் பொருநதுங
தக்க பூரணை யமாவாசி சதமடங கதிகம. (௨௫)

மன்னு வாவினிற சேர்மாதப பிறப்பிலா யிரம்வான்
றுனனு சநதிர சூரிய கிரணமோ ரிலக்க
மலன நறபய னுயாவிதி பாதததி லனநத
மூனனு சிததிரை யைப்பசி விடுவதோ ரயுதம். (௨௬)

அபப யன்னிரண டயுதமா மயனமோ ரிரண்டின
செப்புங் திங்களவா ரததமா வாசிநீர் தினைததே
யொப்ப ருஞசெபங தானஙகள செயயிலொன் றனநதங
தப்பி லாதுபோம பிரமகத தியுநதட மூழ்கின். (௨௭)

தருபப ணமயிதிர்க் கடன்செயிற ருவறு பிதிர்ககள
பொருப்பு வில்லிறு னுறைதரு கயிலையிற் புகுவா
ரருப்ப மன்றிதோ ரொளினுக காயிரம வருடம
விருப்ப நல்கிய சுவர்க்கலோ கததினமே வுவாரால. (௨௮)

எஙகு மறறுள விலிஙகத்து மூர்த்திக ளெல்லாம
பொஙகு தீர்த்தப்பொற் ருமரைக கரையினிற் போநது
கஙக டெய்வமென் னத்தரி சிப்பர்நா டொறுமே
லிஙக பூசனை செயிலெல்லா லிங்கதது நிகழும். (௨௯)

நிததி யந்தட நீர்படிங் திலிஙகபூ சனைகீள்
பத்தி யாற்செயிற் போகமு முத்தியும் பலிக்குஞ்
சததி யநதவம் வேள்விநல விரதமா தான
மொத்த நான்மறை கோடிமூழ் கினர்பய னெவ்வா. (௩௰)

வேறு.

சென்னு தாத்தி னுயர்தானஞ் செய்யுந் தருமந் தவநியம
மனனு தாவாற் செயிற்கிடைக்கும் பொற்ரு மரைவா வியின மூழ்க்க
கனமார் தீர்த்தஞ் சிவரூப மாமா கத்திற பூரபுரகையினி
லினமா முற்றுந் தோய்ந்தபல னெய்து மிதிலோர் நாணமூழ்கின ()

புந்தி மகிழ்ந்திப புனலோாண் டாடிப புராரி தனையுமையை
வந்தி யரும்வந் தனைசெய்து வணங்கின மகபபே றடைந்திடுவ
ரிந்த வுலகிற் றீர்த்தமெல்லா மிதிற்கோ டியிலோர் கலையொவ்வா
பந்த பாவ வினையகலும் பாாக்கிற றெடினற பொருளசேரும். (நஉ)

பானம பண்ணி னினைததவெல்லாம பண்பி னடைவா காசியினில
வானந் தருசக காதீர்த்த மாலோ னிருமித் திடவிளங்கு
ஞானந் தருமபொற றாம ாநீ ரவறறின மிகுநன னலஞ்சிறக்கும்
தேனந் தியபூங் குழலுமைபாற் சிவனே நிருமித் திடுதலினால. (நந)

ஆதி தீர்த்தஞ் சிவதீர்த்த மருள்சேர் தருமக் கினிதீர்த்தஞ்
சோதி செறிதற பரதீர்த்தஞ் சூல தீர்த்தஞ் சிவகங்கை
நீதி திகழ்பொற் றாமரைமா தீர்த்த நிறைவெக் கியதீர்த்தம
பேத மறுமெய்ஞ் ஞானமுத வுதகம் பரமாம பிரமமயம். (நச)

சுறுவ தீர்த்தஞ் சிவஞான தீர்த்தந் தரும தீர்த்தமெழில்
செறிநீர் முத்தி தீர்த்தந்தீர்த் தவுத்த மந்தீர்த் தாசிரய்ம
பொறிசேர பாவ நாசமியல் பொருந்துங் தேவ தீர்த்தநெறி
யுறுசீர்ச சிவப்பி ரீதிகா மோங்கு புகழ்மங் களதீர்த்தம். (நரு)

தொடருந் துரித நாசனமுன் றேன்று முரோக நாசனமே
லடரும் வினைதீர் கலியாணி தீர்த்த மெனும்பே ரதற்கியையும்
படரும் புவியி னிந்நாமம் பகர்ந்தெந் நீரிற படிந்திடினு
மிடர்தீர் பொற்று மரைத்தீர்த்த மூழ்கும் பேறெய் துவாதிண்ணம்.

பொறறு மரையின் வரலாறு புகன்றேந் தொகுத்து நமக்கிங்கு
மற்று றுரைப்பா ரதன்பெருமை மாபா தகபபஞ் சிறகனலா
முற்று முலையா ளொருபாகன் றனே வல்லன் மொழிதருநூல
கற்றூர் கேட்டார் படித்திடுவார் களிப்பார் முத்தி யெய்துவரால். ()

வேறு.

என்று கூறினன் முனிவரர் பின்னரு மிசைப்பார்
நன்று கேட்டக மகிழ்ந்தன மெனநனி போற்றிச்
சென்று மூழ்கினர் பலந்தொகைத் திடுஞ்சிவ தீர்த்தந்
தோன்று தீர்த்தம துறைபெண வகத்தியன் சொலவான். (நஅ)

எந்த நாளுமிங் கதிசயங் காட்டுமித் தீர்த்தம்
பந்த நீங்குற மூழ்கினார் பேறவையார் பகர்வார்
புந்தி யாலளந் தறிவொணு விசேடத்திற் பெர்ங்கு
முந்த நீர்வினை வியந்தனன் றுலென மொழிவான் (௩௯)

நீப மாகிய வேதவா கமங்கணின் மலனு
மாப ரம்பரன் காட்சிதந் தருளுநாள் வணங்கித்
தாப வெம்மைதீர் தியாங்கண்முன் றழைத்திட வருளின
றீப மாகிய தீர்த்தமொன் றுதவுதி யெனலும். (௪0)

கருணை நாயக னியம்புவான் வேதவா கமமே
பொருணை யம்பெறு மதிகுயம் புகன்றிடக் கேண்மின
னருண மார்தரு தீர்த்தமே நமதுருத் தையல
வருண மார்தரு பீடநா மிலிங்கத்தின் வடிவம். (௪௧)

எம்மிற் றோன்றியே யொளிங்குவா மாலய னிமையோர
தம்மிற் றோன்றினு சராசர மெவையுநந் தன்மை
நும்மிற் றோன்றிடக் காண்மினீர் நூலவடி வன்றோ
கம்மிற் றோன்றிய வுலகாக்கக் காணுத லரிதால். (௪௨)

இன்ன னம்புகன் றிலிங்கத்தி னுறபவ மாகி
யுன்ன ருமமொரு குரோசதூ ரத்திறகுள னாகச
சன்னி திகவெதிர் தோன்றிடத் தன்கரு ணையிறை
பன்ன ருமபுனற் றீர்த்தமுண் டாக்கினன் பகர்வான். (௪௩)

யாமி யற்றலா லிதுசிவ தீர்த்தமித் தீர்த்தகு
சேம மாருயிர்க் கெனப்படிந் திடிற்றுரி சிக்கிற
பூமென் றண்புன லுண்டிடிற் புரோக்கணம் புரியி
னும நோய்களு நீங்குமெப் பாவமு நசிக்கும். (௪௪)

நங்கை யேமுதற் றீர்த்தங்கள் கருதிநம் விழியை
யங்கை யாற்புதைத் திட்டநா ளெமலையங் குலியின்
றுங்க மாகவந் துதித்தலிற் புனிதமாந் தோன்று
மிங்கு நம்மிடத் துதித்தலா லவற்றினீ ததிகம். (௪௫)

இன்னு மொன்றியா மாமின் மாலிய தீர்த்தந்
தன்னின் மூழ்கினுண் ணிற்றொடிற் காணினுஞ் சரிக்கிற
றுன்னு பாதக தொலைத்துடன் றொல்கதி யளிக்கும்
பன்னு மீதன்றி மற்றொன்று பகருதுங் கேண்மின். (௪௬)

வேறு.

அருப்பூர வெமையாட்டங் கருப்பூர தீர்த்தமிதி லதிக நாமே, விருப்பூரக் கொண்டருளி வேண்டுவோன் வேண்டியதை மிகவு மீ வோ, நெருப்புப்பூரபஞ் சென்றித்த முழுந்தளவுண பவாபவங்க ணீறு மூண்மை, கருப்பூர வாஞ்சையினுற கருப்பூர சொக்கெனுமபேர் கருதிக கொண்டோம். (சஎ)

வேதநெடு மான்முனிவா விண்ணவரே முதலினராநாம விரும்பி யாடுங், தாதுகமழ கருப்பூர்ங்ன மாலியதீரத தமவிருமபித தவததாற கொளவா, ரோதுவதென வேள்விமுதற புண்ணியமுன் செயதவாக் கே யுதவுந தீரததங், கேதமுறு பாதகாகளு நாமளிததா லன்றியுண ணக கிட்டா தனரே. (சஅ)

சிவதீரதத முதலாங்ன மாலியதீரத் தசசலததாற சிறபபுற றோங்கி நவைதீரதது வளர்மினிதி லெழுகடலு நாமஙழதது வருவிப பேமபின கவைதீர்ததின னருளகொடுககு மெனவருளி யீசனிலிங கததிஞனை றவதீரதத நீரநணாந்து கதமபமுமவில் லமுமெஙகுந் தழைத்ததனரே.

இததீரதத மாதடததி லிறையருளா னெழுகடலு மியைந்த தெ ன்றுன், முததீரகரு மததடததின் மூழகுனாபே றளவையெம்மான மொழிய லாமோ,வததீர்ததந தருப்பித்துப் பிதிராககடன்க ளொன்று ற்றி லதிகங் கோடி, புததீர்கரு நாகமூழ்நதும பிதிராககளெலலாஞ் சிவ லோகம பொருந்தி வாழ்வார். (ருo)

உம்பாபுகழ் சிவதீரதத மகிமையிவை யுவநதுபடித திடுவோர் கே ட்போர், வெமபவமெல் லாந்தொலைத்துச சிவலோகத தெய்திவிம லன்போல் வாழவர், நம்பாஞங் குமரகுரு பரன்புகன்ற வாறுமக்கு நவின்றே மென்றே, கும்பமுனி மாதவதது வசிட்டாதி முனிவரர்க் குக் கூறி ஞரல். (ருக)

நான்காவது தீர்த்தமகிமையுரைத்த வத்தியாயம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-ககஅ.

ஐந்தாவது

நடம்புரிந்தவத்தியாயம்.

வந்தனை செய்து கேட்ட முனிவரா மலையக் கேதுவே
சிந்தனை செய்த வேதா கமந்தரி சிக்க நாத
னொந்தநா ணிருத்தஞ் செய்தா னவன்பிர மாணம் யாது
நந்தநாட் கண்டோ ரியாவ ரவைதொகுத் துரைத்தி யென்றார். (க)

நன்றுநீர் கேண்மி னென்று வகத்திய னவில்வான் ஞான
மொனறியே வளரு நீப வுருவினவே தாக மங்கண்
மனறுளே நடிக்குஞ் சொக்கை யிரண்டற மனத்துள வைத்தே
நினறுமா தவங்க ளாற்றி யுறைந்தன நெடுங்கா லங்கள். (உ)

உறைந்திடுங் கான்முன வந்த வுருத்திரப் பிரள யத்தான
மறைந்திடு முலகத் தோடு வானுளோ ரையுமொ டுங்கி
நிறைந்திடு மீசனா ருனே யொருவனாய் நின்றன காலத்
திறந்தெரிந் தியாவு முன்போற சிருட்டிசெய திடுவா னெண்ணி. ()

தனனிட மாக விச்சா சத்தியைத் தோற்று வித்து
மனனுமச சத்தி யானமுன னொடுக்கிய வாறே நலக
முனனுற வருளிச செய்தா னவனிட மாக முன்போற்
றென்மைசே ரயன்மால் விண்ணோர் சனகாதி யோகா தோன்றி ()

மற்றுள பிரவஞ் சங்க ளியாவுமவ வரம்பிற் றோன்றி !
முறறுறு முலக மியாவு முன்னையி னிருந்த திப்பாற .
கற்றையஞ் சடையான் வேதா கமங்களுக கருளை நல்கச்
சொற்றிடு மிலிங்க நின்றங் தோனறினன விடைமேன முனபோல்.

வெளிவரு சொக்கன் றன்னை வேதவா கமங்க ணோக்கித்
அளிவரு மன்பின் முன்போற றோத்திரஞ் செய்து நிற்பக்
களிவரு மனபர்க் கன்பன் கருணைசெய் தருளித் தூய !
தனிவரு முனைத்தீர் கேண்மி னல்குவம் வரங்க ளென்றான. (சு)

முன்புநீ யருளிச் செய்த மொழிப்படி யாங்கள் காணத்
தென்புவி விசேட மாகத் திருநடங் காட்ட வேண்டு
மன்பதை யுலகங் கண்டு வாழ்வுற வேண்டு மென்ன
வன்பினுற் றொழுது கேட்ப வவ்வர மளித்தெம் மையன். (எ)

மடாலய ... 20.

கண்டுசே விக்க ஞானக் கண்கொடுத் தருளி மன்றிற்
பண்டைவே தாக மங்கண் முதலிய பரவிக் காண
வண்டருங் காணொ ணாத பொற்பத மதிர வீசித்
தண்டலி விருத்தஞ் செய்யத் தரைகடு நடுங்கிற் றன்றே. (௮)

நானில நடுங்கக் கண்டு நந்திரு நடம்பொ றாதென்
றூனிலா தாடுஞ் சொக்கன் றிருவுளத் தடைத்த ழைத்து
வானிலம் போற்று நாய மாபெருங் கயிலை தன்னைப்
பூநிலச் சீவன் முத்தி புரத்தினி லிருத்திப் பின்னர். (௯)

அக்கயி லையினெட் போது மான்றமுச் சபையி னம்பொ
ன்னுக்கின ரொளிருந் தூய வுத்தர மன்றந் தன்னிற்
செக்கர்மே னியவெம் மண்ண றிருநடம் புரிந்தான் கண்டு
மிகுயர் ஞானக் கண்ணாற் றுதித்தவே தாக மங்கள். (௧௦)

மூவரா லறிய வொண்ணாச் சிவலோகந் தன்னையு முன்னைப்
பாவறிந் துதவு வானீ பவனமத் தியினை ழைத்து
மேவுறு நகர மாக்கி விரும்பினீர் காணுமி னென்ன
யாவருங் கண்டு போற்றி யாரகா வெனச்சே வித்தார். (௧௧)

அவ்வுல கத்தின் மேவு மாதிநந் திரையெவள் ளேறுறைத்த
தவவுரு துறைக ணங்க டன்னையுங் காட்டி யப்பா
னவ்விசேர் காத்தி ஞானமுன னவின்றமார் கழிமா தத்திற்
செவ்விய திரைகா * ளீசா னத்திரத் தினமன் றத்தில். (௧௨)

அங்கயற் கண்ணி யம்பொ னாசனத் திருந்து காணப்
பங்கய வலத்தாள் பண்பின் முயலகன் முதுகி லூன்றித்
துங்கநூ புரங்க ளார்ப்பத் துலங்கிடத் தாள்குஞ் சித்தே
செங்கைமான் மழுவோன் றூய சிங்கார நடனஞ் செய்தான். (௧௩)

அரியயன் முதலாம் விண்ணோ ரம்புலி பாம்பு மோனந்
தெரிதரு முனிவர் மற்றுஞ் செப்பிய வனேகர் காண
விரிசட ரமுத லிங்க முன்னரின் வெள்ளி மன்றிற்
பரிவொடு பரமா னந்தப் பராபர நிருத்தஞ் செய்தான். (௧௪)

உற்றகா ரணத்தி னாற்பூ வுலகமா கயிலை யென்று
நூற்றவர் புகழ்பூ லோக சிவலோக மென்று நாமம்
பெற்றது மதுரை யிந்தப் பெருங்கதை படிப்போர் கேட்போர்
கற்றுளோர் பவங்க ணீங்கிக் கதியடைந் திடுவர் திண்ணம். (௧௫)

---

* ஆதிரைநாளிலே, உஷக்காலத்திலே. உஷக்காலம் வடநூலிற்கூறப்பட்டது.

கெழுத்தினே மென்னக் கேட்ட கெடுந்தவர் மலையக் கோவே
மகத்துவத் ததிக மிந்த மாபெருங் கயிலை யென்றுய
தொகுத்தவக் கிரிவ ளங்க டொகைவகை விரிவா யாங்கள்
பகுத்துணா் தறிய வேண்டும் விளங்கநீ பகாதி யென்றார். (௧௬)

ஐந்தாவது நடம்புரிந்தவத்தியாயம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௨௧௪

ஆறாவது
மகாகைலைமான்மியஞ்சொன்னத்தவத்தியாயம்.

வினையிலா யென்றும பனனி வினவிடுத தருமசன்மா
முனமுறை செயதான் றெயவ முதுபெருங கயிலை வண்மை
பனவரிற் றவத்தா னனன்ஞானை பகர்ந்தவா றுரைப்பேங் கேண்மி
னனகமா முனிவிர் காளென றகத்திய னருளிச செயவான். (௧)

சிவனையே பொருளாக கொண்டு தெளிந்தபே ரறிவின மிக்கா
னவமுறு கறபின பனனி வினயிலா நவிலவாண ஞானத
தவாகளிற பெரியோய மிகுத்த தனிபபெருங கயிலை யென்றே
புவமையின ஞான நூலக ளுரைக்குமா துணர வேண்டும. (௨)

அவவரை யிருக்குந் தான மதனகொடு முடியி லக்க
மெவ்வழி யுயர்ப கறசி யுறைபவ ரியையும போகந
தவவுறு தலைவி ரித்துச சாற்றுதி தமியேற கெனனக்
கௌவைதீா தருமசனமாக கழறுவான மனைவி கேட்ப. (௩)

சொற்றிடும் புவனந தோறுந் தொடுகடற பூவி னுள்ளு
மற்றுள தீவு தோறுங கயிலைமால வரைக ளுணடு
கற்றைவார் சடையெம் மீசன கருணைமா துமையா ளோடு
முறறிடு மங்கு கெல்லா முன்னவா றின்னுங் கேணீ. (௪)

பிறங்குமவ் விடங்க டோறும் வைகுண்டம் பிரம லோகந
திறங்கெழு கமலக கண்ண னெண்கணனா ரவறறிற் சோவா
